DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 81 /2020**

**prosecution witness: Pw 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1 to A3 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேஷ் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**19.04.2023**

குறுக்கு விசாரணை**:**

1. சம்பவ காலத்தில் இராமேஸ்வரம் பகுதியில் எவ்வளவு நாள் வேலை பார்த்தேன் என்றால் 6 மாத காலம் வேலை பார்த்தேன். இராமேஸ்வரத்தில் உள்ள எல்லா பகுதிகளும் எனக்கு பரிச்சையமானது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் இராமேஸ்வரம் கடற்கரை பகுதியில் ரோந்து சென்றேன் என்றால் எனக்கு ரகசிய தகவல் கிடைத்தது. எத்தனை மணி என்றால் அன்று 11.15 மணி இருக்கும். 11.15 மணிக்கு நான் கடற்கரைக்கு வரும் போது என்னுடன் யார் வந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் வந்தேன்.

2. இராமேஸ்வரம் கடற்கரை பகுதியில் எந்த பகுதிக்கு சென்றேன் என்றால் நேராக சேராங்கோட்டை கடற்கரை பகுதிக்கு சென்றேன்.சேராங்கோட்டை கடற்கரை பகுதிக்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1/2 கிமீ தூரம் இருக்கும். மாரியம்மன் கோவில் தெரு சேராங்கோட்டைக்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது.நான் சேராங்கோட்டையில் இருந்து மாரியம்மன் கோவில் தெருவிற்கு ஜீப்பில் வந்துவிட்டேனா என்றால் நடந்து வந்தேன்.அப்போது எல்லா பகுதிகளிலும் தேடிக்கொண்டு அங்கு வந்தேனா இல்லை நேரடியாக மாரியம்மன் கோவில் தெருவிற்கு வந்தேனா என்றால் நேரடியாக அங்கு தான் வந்தேன்.

3. என்னுடன் சாட்சிகள் ஜான்சன், ஆனந்தன் எப்போது சேர்ந்தார்க்ள் என்றால் சேராங்ககோட்டை கடற்கரையில் சேர்ந்தார்கள். ஜான்சன், ஆனந்தன் ஆகியோருடன் வேட்டை தடுப்பு காவலர்களும் வந்தார்கள். வேட்டை தடுப்பு காவலர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 3 பேர் இருந்தார்கள்.என்னை சேர்த்து 6 பேர் தான் மாரியம்மன் கோவில் தெருவிற்கு சென்றோம்.

4. மாரியம்மன் கோவில் தெருவில் எதிரிகளிடம் யார் யார் கையில் என்ன என்ன பொருட்களை வைத்திருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். ஆஜர் எதிரிகளின் பெயர் தெரியுமா என்றால் பெயர் மட்டும் தெரியும் ஆட்களை எனக்கு தெரியாது அதிக நாள் ஆனாதால் முகம் தெரியவில்லை. ஆஜர் எதிரிகள் 3 பேரில் யார் யார் என்று பெயரை குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான்.

5. நான் இங்கு பணியில் இருந்த காலத்தில் எத்தனை வழக்குகள் பதிவு செய்துள்ளேன் என்றால் சுமார் 25 வழக்குகள் பதிவு செய்துள்ளேன். அன்று 3 எதிரிகளையும் யார் பிடித்தது என்றால் எங்களை பார்த்தவுடன் பொருட்களை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் முருகையா மற்றும் முருகேசன் ஆகியோர்களை ஜான்சன் பிடித்தார், சக்திவேலை ஆனந்தன் பிடித்தார். எவ்வளவு துாரம் ஓடி பிடித்தார்கள் என்றால் ஒரு 50 மீ துாரம் ஓடி பிடித்தார்கள். ஆட்களை மட்டும் தான் பிடித்து வந்தார்கள் பொருட்களை ஏற்கனவே கிழே போட்டுவிட்டார்கள்

6. பொருட்கள் எங்கு கீழே கிடந்தது என்றால் கடற்கரையில் கீத்து கொட்டை பக்கத்தில் கிடந்தது. அந்த கொட்டகை யாருடையது என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அந்த கொட்டகைக்கும் வழக்கிற்கம் சம்பந்தம் இல்லாததால் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் ஆட்கள் யாரும் இல்லாததால் உடனே கிளம்பிவிட்டோம். எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் 11.45 மணிக்கு கிளம்பிவிட்டோம்.

7. கிளம்பி நேராக எங்கு சென்றோம் என்றால் மாரியம்மன் கோவில் பகுதியில் இருந்து சேராங்கோட்டைக்கு நடந்து சென்று எனது ஜீப்பில் மண்டபம் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். மண்டபம் அலுவலகத்திற்கு செல்லும் போது 2 மணி இருக்குமா என்றால் 01.30 மணி இருக்கும்.பிடிபொருட்களை அனைத்தையும் வேட்டை தடுப்பு காவலர்களுடன் மற்ற காவலர்களும் சேர்ந்து தான் துாக்கிவந்தார்களா என்றால் இல்லை எதிரிகளே துாக்கிவந்தார்கள்.

8. நான் மண்டபம் அலுவலகத்திற்கு சென்ற பின்பு தான் அங்கு வைத்து தான் பொருட்களை எடை போட்டு பார்த்தேன் என்றால் சரிதான். தனித்தனியாக எதிரிகள் யார் யார் எவ்வளவு வைத்திருந்தார்கள் என்று தனியாக எடைபோட்டு பார்க்கவில்லை பிடிக்கும் போதே மொத்தமாக கொட்டிவிட்டார்கள் அதனால் மொத்தமாகத்தான் எடை போட்டோம். சம்பவ இடத்தில் எதிரிகள்

பிடிபொருட்களை கீழே போட்டதால் சிதறி விட்டது அதனை மொத்தமாக அள்ளிவந்ததால் தனித்தனியாக எடை போடவில்லை.

9. நான் தாக்கல் செய்த அறிக்கையில் சம்பவ இடத்தில் எதிரிகள் பிடிபொருட்களை கிழே போட்டு சிதறிவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான் கிழே போட்டதாகத்தான் சொல்லியுள்ளோம். நான் அலுவலகத்தில் எத்தனை மணிக்கு எடை போட்டு பார்த்தேன் என்றால் மதியம் 01.35 மணியளவில் எடை போட்டு பார்த்தேன். எடை போட்டு பார்த்த பின்பு தான் அலுவலகத்தில் வைத்து H நமூனா, அத்தாட்சி தயார் செய்தோம் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்தே H நமூனா தயார் செய்தோம்.

10. சம்பவம் நடந்த இடத்திலேயே H நமூனாவில் எடையையும் போட்டுவிட்டேனா என்றால் இல்லை எடைக்கு மட்டும் இடம் விட்டு அலுவலகத்தில் வந்து எடைபோட்டு பார்த்து போட்டோம்.பொதுவாக H நமூனா என்பது சம்பவ இடத்தில் வைத்து முழுமையாக பூர்த்தி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். நான் H நமூனாவில் எடை மட்டும் மண்டபம் அலுவலகத்தில் வைத்து பூர்த்தி செய்தது வனசட்டப்படி தவறு என்றால் சரியல்ல. H நமூனாவில் யார் யாரிடமிருந்து எவ்வளவு பொருட்கள், என்ன என்ன பொருட்கள் கைப்பற்றினோம் என்று சொல்லவேண்டும் என்றால் சரிதான் தெரியவில்லை என்றால் மொத்தாக போட்டுவிடலாம்.

11. இந்த வழக்கில் யார் யாரிடமிருந்து எவ்வளவு கைப்பற்றினோம் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எத்தனை மணிக்கு H நமூனா பூர்த்தி செய்தோம் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எந்த இடம் என்ற விபரமும் சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது.H நமூனாவில் மண்டபம் அலுவலகத்தில் வைத்து எடையை மட்டும் பூர்த்தி செய்யும் போது மணி என்ன இருக்கும் என்றால் 01.30 முதல் 01.45 இருக்கும். சம்பவ இடத்தில் H நமூனாவை பூர்த்தி செய்யும் போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் 10 நிமிடம் இருக்கும்.

12. மகஜர் நான் தான் தயார் செய்தேன். மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அப்போது மணி 11.40 இருக்கும். அதை எழுதுவதற்கு 10 நிமிடம் ஆகும். மற்ற ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்தில் வைத்து தான் தயார் செய்தோம் என்றால் சரிதான்.அத்தாட்சியில் குற்றம் நடந்த இடம் புலிதேவன் நகர் மாரியம்மன் கோவில் கடற்கரை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் அத்தாட்சியில் பிடிபொருட்கள் யார் யாரிடமிருந்து கைப்பற்றினோம் தனித்தனியாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. எதிரி முருகசனிடம் எத்தனை மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினோம் என்றால் 01.50 மணி இருக்கும். சக்திவேலிடம் வாங்கும் போது மணி 01.45 இருக்கும். முருகையாவிடம் வாங்கும் போது

மணி 02.05 இருக்கும். 3 எதிரிகளிடமும் ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதி பதிவு செய்தது என்றால் எதிரி சக்திவேலின் எனது முன்னிலையில் வனவர் திரு.ஆனந்தன் பதிவு செய்தார், முருகேசன் மற்றும் முருகையாவிடம் என் முன்னிலையில் வனகாப்பளார் திரு. ஜான்சன் பதிவு செய்தார்.

14. ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த சாட்சிகள் முன்னிலையில் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.அதேபேல் 3 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் முன்னிலையில் எங்கு வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.பிடிபொருட்களை பிடித்து எதிரிகளை நீதிமன்றத்திற்கு கொண்டுவரும் முன்பு எனது மேல்அதிகாரிக்கு தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்தேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

15. பொதுவாக கேன்கள் மார்கெட்டில் கிடைக்ககூடியது என்றால் சரிதான். கடல் அட்டையும் கடற்கரை பகுதிகளில் மீனவர்கள் மத்தியில் கிடைக்ககூடியது என்றால் சரிதான். நாங்கள் கேன் மற்றும் கடல் அட்டைகளை வாங்கி பொய்யாக பிடித்தது போல் எதிரிகள் மீது புள்ளி விபரத்திற்காக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உடன் வந்த 3 வேட்டை தடுப்பு காலவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் யாரிடமும் மகஜரிலோ, ஒப்புதல் வாக்குமூலத்திலோ, மற்ற ஆவணங்களிலோ சாட்சியாக கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

16. நான் எதிரிகளை விசாரணை என்ற பெயரில் அலுவலகத்திற்கு அழைத்து சென்று பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமே இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்ல நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகளை பார்க்கவும் இல்லை, பிடிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் 3 எதிரிகளிடம் வாங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் மாரியம்மன் கோவில் தெரு என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.